**7 - STD** **மூன்றாம் பருவ நிறைவுத் தேர்வு - 2024** பதிவு எண்.

**தமிழ்**

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

**I. அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **4 x 1 = 4**

1. திருநெல்வேலி _____ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
   அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி
2. 'இடர் ஆழி நீங்குகவே' - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
   அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்
3. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் _____
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்
4. காயிதேமில்லத் _____ பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்
   அ) தன்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை

**ஆ. பொருள் தருக.** **2 x 1 = 2**

5. மாரி
6. சாந்தம்

**இ. பிரித்து எழுதுக.** **2 x 1 = 2**

7. நாடென்ப
8. இன்சொல்

**ஈ. சேர்த்தெழுதுக.** **2 x 1 = 2**

9. முதுமை + மொழி
10. அறம் + கதிர்

**உ. பொருத்துக.** **1 x 4 = 4**

11. சாந்தம் - சிறப்பு
12. மகத்துவம் - உலகம்
13. தரணி - கருணை
14. இரக்கம் - அமைதி

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி** **4 x 2 = 8**

15. பாரி மகளிரின் பெயர்களை எழுது.
16. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
17. பொய்கையாழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?
18. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
19. உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன?
20. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
21. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எ.கா. தருக.

**III. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி** **3 x 4 = 12**

22. இளம் வயதியேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?
23. குயில்குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுது.
24. ஆட்சிமொழி பற்றிய காயிதேமில்லத்தின் கருத்தை விளக்குக.
25. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?
26. பொருளாகு பெயரையும் சினையாகு பெயரையும் வேறுபடுத்துக.

**IV. பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக.** **4 + 2 = 6**

27. மாரியொன்று எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை எழுது.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CamScanner

28. "உறுபசியும்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுது.

**V. பொருத்தமான உவமையை எடுத்து எழுது** **4 x 2 = 8**

29. 1. அப்துல்கலாமின் புகழ் ______ உலகெங்கும் பரவியது.
(குன்றில் மேலிட்ட விளக்கு போல / குடத்துள் இட்ட விளக்கு போல)
2. என்தாயார் என்னை ______ காத்து வளர்த்தார்
(கண்ணை இமை காப்பது போல / தாயை கண்ட சேயைப் போல)

30. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.
1. நெல்லையப்பர் கோவில் ______ உள்ளது.
2. ______ சொற்களைப் பேச வேண்டும்.

31. கலைச்சொல் தருக. 1. Charity 2. Philosophy

32. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.
(அதுபோல, ஏனெனில், ஆகையால்)
1. குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது ______ காக்கையின் கூட்டில் முட்டையிடும்.
2. அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். ______ மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.

**VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி** **1 x 6 = 6**

33. சிதம்பரனார் குறிப்பிடும் திருநெல்வேலி கவிஞர்கள் பற்றி செய்திகளைத் தொகுத்து எழுது.

34. "உண்மை ஒலி" கதையைச் சுருக்கி எழுது.

**VII. கட்டுரை / கடிதம் எழுதுக.** **1 x 6 = 6**

35. அ) என்னை கவர்ந்த நூல் என்ற தலைப்பில் கட்டுரை எழுது. **(அல்லது)**
ஆ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுது.



www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CamScanner